# காணிபாக்கம் விநாயகர் ஆலயம்

## சாந்திப்பிரியா



ஆந்திரப் பிரதேசத்தில் சித்தூரில் இருந்து பதினோரு கி.மீ. தொலைவில் உள்ளது காணிப்பாக்கம். பஹுடா என்ற நதிக் கரையில் உள்ள ஆலயத்தில் எழுந்தருளி உள்ள விநாயகர் உண்மைகளை வரவழிக்கும் விநாயகர் என்ற பெருமை கொண்டவர். அந்த ஆலயத்தில் சென்று வணங்கினால் தீராத கஷ்டங்கள் தீரும், வியாதிகள் விலகும் என்ற நம்பிக்கை பலமாக உள்ளது. பதினோறாம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழனால்

எழப்பப்பட்டதாக கூறப்படும் அந்த ஆலயம் விஜய நகர மன்னர்களினால் மேலும் சீரமைக்கப்பட்டதாம்.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அந்த ஆலயம் உள்ள ஊரில் மூன்று விவசாயிகள் இருந்தனர். விசித்திரம் என்ன எனில் அந்த மூவரும் ஒவ்ஒரு விதத்தில் அங்கஹீனமானவர்கள். ஒருவர் செவிடர், இன்னொருவர் ஊமை, மூன்றாமவர் குருடன். ஆனாலும் அந்த மூவரும் சேர்ந்து ஒரு நிலத்தை உழுது பயிரிட்டு அதில் வந்த வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டி வந்தார்கள். அவர்கள் அந்த வயலுக்கு அருகில் இருந்த கிணற்றில் இருந்துதான் அவர்கள் நீர் இறைப்பது பழக்கம்.

இப்படியாக சென்று கொண்டிருந்த அவர்கள் வாழ்வில் ஒரு நாள் அற்புதம் நிகழ்ந்தது. கிணற்றில் இருந்த நீர் முழுமையாக வற்றி விட அதனுள் உள்ள ஊற்றில் அடைப்பு ஏதும் இருக்கின்றதா எனப் பார்க்க அவர்களில் ஒருவன் கிணற்றில் இறங்கி அதைத் தோண்டினான். என்ன வினோதம், அவன் மண்வெட்டி எதோ ஒரு கல் மீது மோத, அதில் இருந்து வெளியான இரத்த சிவப்பு நிறத்தில் நீர் ஊறத் துவங்கியது. சற்று நேரத்தில் கிணற்றின் மண் பகுதி முழுவதும் சிவப்பாகி விட்டது. பயந்து போன மூவரும் அந்த ஊர் ஜனங்களை அழைத்து வந்து அதைக் காட்டினர். அவர்களும் அங்கு வந்து அந்த அதிசயத்தைக் கண்ட பின் எங்கிருந்து இரத்த சிவப்பு நீர் வெளி வருகின்றது என அந்த கிணற்றில் இறங்கிப் பார்க்க அதில் முழுகி இருந்த வினாயகர் சிலை வெளியில் வந்தது. அனைவரும் குதூகுலித்து அதை வெளியில் எடுத்து தேங்காய் உடைத்து அபிஷேகம் செய்து பூஜித்தனர். அந்த தேங்காய்களை உடைத்த பொழுது அதில் இருந்து வெளியான இளநீர் சுமார் இருபது குழி தூர அளவுக்கு விழந்தது. அதனால் இருபது குழி அளவைக் கூறும் வார்தையான

காணியையும், பாக்கம் என்றால் பாய்ந்து செல்லுதல் என்பதை கூறும் இரண்டாவது வார்த்தையையும் சேர்த்து அந்த இடத்திற்கு காணிப்பாக்கம் எனப் பெயரிட்டனராம். இன்னும் ஒரு அதிசயமும் நிகழ்ந்தது. அந்த சிலையை வெளியே எடுத்தவுடன் குருடனுக்கு கண் பார்வை கிடைத்தது, செவிடனுக்கு காது கேட்கத் துவங்கியது, ஊமை பேசத் துவங்கினான்.

அந்த ஆலயத்தின் பக்கத்தில் ஓடும் நதி பஹுடா பற்றியும் வியப்பான ஒரு கதை உண்டு. முன்னொரு காலத்தில் அந்த ஆலயம் இருந்த பகுதிக்கு இரண்டு சகோதரர்கள் தீர்த்த யாத்திரைக்கு வந்தனர். வந்தவர்கள் இருவரும் மிகவும் பவித்திரமானவர்கள், நேர்மையானவர்கள். அங்கு வந்து சேர்ந்து ஒரு வயல் பகுதியில் தங்கினர். சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை. இளைய சகோதரருக்கு ஒரே பசி. ஆகவே அருகில் இருந்த வயலில் இருந்த மாங்காய் மரத்தில் இருந்து அதன் சொந்தக்காரனைக் கேட்காமல் ஒரு பழத்தைப் பறித்துத் தின்று விட்டார். அதனால் நேர்மையை கெடுத்துக் கொண்டு விட்டான் என கோபமுற்ற மூத்த சகோதரர் அந்த நாட்டு அரசனிடம் சென்று தன்னுடைய சகோதரர் திருடி விட்டான் என புகார் கூறினார். அரசனும் அவரை அழைத்து விசாரித்தார். அந்த மரத்தின் சொந்தக்காரரைக் கேட்காமல் பழத்தைப் பறித்துத் தின்றது திருட்டுக் குற்றமே என கருதி அவருடைய இரண்டு கைகளையும் வெட்டி விடச் சொன்னார். என்ன செய்வது, இரு கைகளையும் இழந்தவர் தம்மைக் காப்பாற்றுமாறு வினாயகரை வேண்டிக் கொண்டே அந்த நதியில் குளிக்க இறங்க, வெட்டப்பட்ட கைகள் தாமாக அவருடைய உடலில் மீண்டும் சேர்ந்தது. அந்த அதிசயத்தைக் கண்டவர்கள் வினாயகரின் சக்தியைப் புரிந்து கொண்டனர். அந்த நதிக்கும் அதனால் கையைக் கொடுத்த நதி என்ற அர்த்தம் தரும் பஹுடா நதி என பெயரிட்டனர்.

அந்த கிணற்றில் உள்ள நீர் இன்றுவரை குறையவே இல்லையாம். மேலும் ஒரு வியப்பான செய்தி என்ன எனில் நாளாக நாளாக அந்த வினாயகர் சிலையும் வளர்ந்து வருகின்றதாம். முன்பு ஒரு முறை ஒரு பக்தர் வினாயகருக்குப் போட்ட கவசத்தை தற்பொழுது போட முடியவில்லையாம். மூல கணபதியின் உருவம் கிணற்றுக்குள் இருந்திருந்தாலும் அதை வெளியே எடுத்தபோது அந்த சிலை வயிறு பகுதிவரைதான் இருந்தது. கிணற்றை ஆழப்படுத்த தோண்டிய பொழுது அந்த சிலையின் தலையில் மண்வெட்டி பட்டு சிவப்பு நிற நீர் வெளியே வந்தது அல்லவா, அதன் விளைவாக அதன் தலையில் காயம் போன்ற வடு உள்ளது என்ற செய்தி வியப்பாக உள்ளது .

இன்னுமொரு வியப்பான செய்தி. அந்த ஊரில் திருட்டுக் குற்றம் செய்தவர்களை அந்த நதியில் குளிக்கச் சொல்லிய பின் வினாயகர் முன் சென்று திருட்டு சம்மந்தமாக உண்மையைக் கூறச் சொல்வார்களாம். வினாயகர் முன் பயத்தினால் திருடனால் பொய் கூற முடியாது. அதனால் உண்மையைக் கூறி விடுவானாம். இன்றும் இந்த வழக்கம் அந்த ஊரில் உள்ளதாம். ஆகவே அந்த வினாயகரின் பெயர் உண்மைகளை வரவழிக்கும் வினாயகர் என ஆயிற்று.

# Kanipakkam Lord Vinayaga temple

## Santhipriya



In Andhra Pradesh, at a distance of 11 km from Chittoor, lies a small town called Kanipakkam. In Kanipakkam a unique temple for Lord Vinayaga exists and Lord Vinayaga is known as the Lord who brings out the truth. There is a strong belief that visiting the temple and worshiping the Lord would cure incurable diseases, their debt gets cleared and all hurdles in life slowly vanish. The temple is said to

have been reportedly built by Kulothunga Chola in the 11th century and later renovated by the Kings of Vijayanagara.

The history of this temple is quite interesting. About a 1000 years ago, there were three physically-disabled brothers. While one was blind, the other was dumb and the third brother was deaf. They earned their modest living by cultivating a small piece of land. While one of the brothers was irrigating the land, the other two would draw the water from the well.

As the days passed by, the well dried up with no trace of water. One of the brothers got into the well and began digging the bed with an iron spade. Suddenly he felt that his spade had hit a stone like object and he noticed blood oozing out soon to make the wet sand of the well turn fully reddish. Panicked brother came out of the well and ran to the village and brought the villagers to show what had happened. Some of the villagers who went into the well found that some object was protruding. They deepened the sides and found the stone to be the statue of Lord Vinayaga. Happily they brought it up and enshrined in a place and began to worship the Lord. In a state of miracle, once the idol was brought out, all three deformed brothers got their deformities corrected. The blind got eye sight, the deaf was able to hear and the third brother dumb began to speak.

There is also an amazing story about the river Bahada that flows by the side of the temple. Two brothers came on a pilgrimage to this temple walking all the way from a distant village. Both were very pious, honest and god fearing. On arrival there, they rested in an open farm land owned by someone, where lots of trees

and plants were also there. They were feeling terribly hungry and nothing was available to eat. The younger brother, out of hunger climbed up a mango tree, plucked a fruit and ate it without asking its owner. On noticing his brother plucking the fruit without taking the permission of the owner, the elder brother got angry viewing the act as theft which he ruined his integrity. He went to the King of the state and complained that his brother had committed a theft. The king summoned them and after verifying the facts, he ordered chopping of the hands of the younger brother for having committed a theft. The person who lost both hands went down to bathe in the river praying to Lord Ganesha to show him a way to live. What a miracle. The moment he entered into Bahada River with prayer, the severed hands rejoined his body by themselves and he turned into a normal person with two hands. Everyone including the King understood the greatness and power of Lord Vinayaga enshrined there and therefore named the river as Bahada, broadly meaning the river that gifted back the severed hand( Baha means arms and Da means giver).

The water in that well has never dried up till date and the amazing story is that the statue of Lord Ganesha continues to grow each day. It is not possible to put on the original shield once donated by a devotee as the size of the Lord continues to grow up. Though the original idol of Lord Vinayaga which was inside the well may have been in the full form of the Lord. But the recovered idol of the Lord was visible only up to the abdomen. A scar is visible on the head of the idol which was the result of hit received by the spade on the head of the idol while he was attempting to deepen the well when it went dry.

Another amazing news. Whenever someone had committed a crime, the villagers used to ask the thief to take bath in the river and tell the truth. Out of fear to Lord Vinayaga, they would not dare to tell a lie and used to confess to the crime. Even today the practice reportedly exist in that village. Hence the Lord is known as the Lord Vinayaga who brings out the truth.